# செந்தமிழ்

தொகுதி : 97 திருவள்ளுவர் ஆண்டு 2033 சனவரி 2003 பகுதி :1

திங்கள் இதழ்

ஆசிரியர் இரா. அழகுமலை எம்.ஏ.,எம்.ஃபில்.,

பதிப்பாசிரியர் இரா. சதாசிவம் எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

## தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் திரு.நா. குமரன் சேதுபதி | தலைவர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | துணைத்தலைவர் |
| திரு. இரா. அழகுமலை | செயலாளர் |
| திரு. மா. சங்கர பாண்டியன் | உறுப்பினர் |
| திரு. டாக்டர். ந. சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி என்ற அசோக் | உறுப்பினர் |
| திரு. ச. பரங்குன்றம் | உறுப்பினர் |
| திரு. வே. திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி | உறுப்பினர் |
| திரு. க. முத்தையா பசும்பொன் | உறுப்பினர் |
| திரு. இரா. கண்ணன் | உறுப்பினர் |
| திரு. சோ. இராமகுரு | உறுப்பினர் |

## செந்தமிழ் ஆசிரியர் குழு

பேரறிஞர். நா. பாலுசாமி
பேரறிஞர். தமிழண்ணல்
பேரறிஞர். செ. கந்தசாமி
டாக்டர். ந. சேதுராமன்
பேரறிஞர். ம.ரா.போ. குருசாமி
பேரறிஞர். கதிர். மகாதேவன்
பேரறிஞர். அ.அ. மணவாளன்
பெரும் புலவர். இரா. இளங்குமரன்
பேரறிஞர். அ. தட்சிணாமூர்த்தி
பேரறிஞர். ந. வாசுகிராஜா
பேரறிஞர். இ.கி. இராமசாமி
பேரறிஞர். சே. அரிராமநாதன்
திரு. வே. திருவரங்கராசன்

# செந்தமிழ்

தொகுதி : 97 திருவள்ளுவர் ஆண்டு 2033 சனவரி 2002 பகுதி :1

## திங்கள் இதழ்

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 60 | ரூ. 600 |
| வாணாள் கட்டணம் | ரூ. 500 | ரூ. 2000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |

ஆசிரியர் **இரா. அழகுமலை** எம்.ஏ.,எம்.ஃபில்.,

பதிப்பாசிரியர் **இரா. சதாசிவம்** எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை – 1.

# பொருளடக்கம்


இதழ்மணம் - 1

*இரா.சதாசிவம் எம்.ஏ.,எம்.பில்.,*

தன்முயற்சித் தமிழியக்கம் - 3

புலவரும் புரவலரும் - 4

பௌத்த சமய விசாரனை - 7

*ஜெ.எம். நல்லசாமிபிள்ளை*

இராமன் மௌனியாகிவிட்ட மூன்றிடங்கள் - 12

*முனைவர். இ.கி.இராமசாமி*

திருவெம்பாவை - 17

*பேராசிரியர். சுப. அண்ணாமலை*

சிலப்பதிகாரம் அகநிலைக் கட்டமைப்பு - 20

*பேராசிரியர். தமிழண்ணல்*

வேளாளபுராணம் ஓர் அறிமுகம் - 27

*முனைவர். ம.ரா.போ. குருசாமி*

# இதழ் மணம்

பேராசிரியர் ம.ரா.போ. குருசாமி அவர்கள் "வேளாளர் புராணம் ஓர் அறிமுகம்" என்னும் கட்டுரையில் மகாவித்துவான் கந்தசாமிக்கவிராயர் மாகாவியம் படைக்கும் மகாகவி என்பதை எடுத்துரைக்கும் திறம் கற்போருக்கு இன்பம்தரும்.

நம்முன்னோர்கள் கல்விவளம் ஒருமரம் அல்ல; அது தோப்பு; அவர்கள் படிப்புக்கு ஒரு புராணம் போதாது; ஒரு நூறு புராணங்கள் வேண்டும். அவர்களுக்குத் தொழில் கவிதை. இத்தகைய தமிழ்ச்சுவைஞர்களைக் கந்தசாமிக் கவிராயர் "பா வசியத்தினர் பரப்புக்கு எண்ணிலர்" என வியந்திருப்பது சிந்தனைக்குரியது. இந்தக்களம் தான் மாகாவியங்களும் புராணங்களும் தோன்றுவதற்குக் காரணம் என்பதை ஆசிரியர் நயம்பட எடுத்துரைத்துள்ளார்.

கந்தசாமிக் கவிராயர் உழைத்து வாழும் வள்ளல்களுக்கு ஒரு புராணம் செய்தார் என்பதை,

"வேளாள ரென்றவர்கள் வள்ளன்மையான் மிக்கிருக்கும்
தாளாளர் ஆக்கூரில் தான்தோன்றி மாடமே"

என்ற திருஞான சம்பந்தர் தேவாரத்தின் வழி உணரலாம். அத்தகையவர்களுடைய புராண நூல் ஒன்றைப் பேராசிரியர் ம.ரா.போ அவர்கள் ஆன்ற புலமைத் திறத்தால் விளக்குகின்றார்.

அடுத்து அவர்தம் மாணவர் பேராசிரியர் இ.கி. இராமசாமி அவர்கள் "மௌனம்" சிறப்புறும் இடங்களைச் சுட்டி கம்பனின் காவியத்தைச் சுவைபடப் படைத்துள்ளார். "இராமன் மௌனியாகி விட்ட மூன்றிடங்கள்" என்னும் கட்டுரை காண்க.

பேராசிரியர் தமிழண்ணல், "சிலப்பதிகாரம் அகநிலைக் கட்டமைப்பு" என்னும் கட்டுரையில் நாடகக் காப்பியக் கட்டமைப்பில் சிலப்பதிகாரம் ஈடு இணையற்று விளங்குவதை ஆய்வு செய்துள்ளார். அறிஞர், ஆய்வு மாணவர்களுக்கு இக்கட்டுரை ஒரு விருந்து. நாடு மழைவளமின்றி பஞ்சத்தில்

வாடுதற்குக் காரணம் கண்ணகி வழிபாடு புறக்கணிக்கப்பட்டது தான் என்றும், கண்ணகி வழிபாட்டை நாம் மீண்டும் தொடங்க வேண்டும் என்றும் தமிழண்ணல் அறிவுறுத்தியுள்ளார். நிறைமொழி மாந்தர் ஆணை எனக்கொண்டு சான்றோர் அறிவுரையைத் தமிழ் மக்கள் போற்றுதல் வேண்டும் போற்றும் நெறிமுறைகளைத் தமிழண்ணல் நூல் வடிவில் சான்றோர் பலரைக் கொண்டு வெளியிட உள்ளார். அந்த நூல் இல்லங்கள் தோறும் அணி செய்யும் வாழ்வு நூலாகவும் வழிபாட்டு நூலாகவும் அரிய படைப்பாக வெளிவரவுள்ளது. மேலும் விபரங்களுக்கு அவருடைய முகவரிக்கு உங்கள் முகவரியுடன் அஞ்சல் அட்டையில் பதிவு செய்யுங்கள்.

பேராசிரியர் சுப. அண்ணாமலை அவர்கள் திருவெம்பாவை எட்டாம் பாடலை விளக்கியுள்ளார். "ஏழை பங்காளனையே பாடு," என மணிவாசகர் உயிர்க்கு உற்று உறுத்துவதை ஓர்க.

பேரறிஞர் நா.பாலுசாமி அவர்கள் திருக்குறள் உணர்த்தும் சித்தாந்த சமயம் என்னும் கட்டுரையில் முப்பாலிலும் சமயக் கருத்துக்கள் நீக்கமற நிறைந்திருப்பதை எடுத்துரைத்துள்ளார். திருவள்ளுவர் அறம் பொருள் இன்பம் என முப்பொருள் கூறினாலும் அவற்றுள்ளும் சித்தாந்தம் விரவி நிற்பதை நயம்பட ஆசிரியர் எடுத்துரைக்கிறார்.

அறிஞர் பலருடைய கட்டுரைகளும் பூவில் நாற்றம்போல இவ்விதழில் மணம்பரப்பியுள்ளது கற்போர் அறிவுக்கு இன்பம் பயக்கும். இவ்விதழைக் கண்ணுறும் தமிழன்பர்கள் மற்றவர்களையும் அன்பர்களாக்கி செந்தமிழ் உறுப்பினராக்கும் பணிமேற்கொள்ள வேண்டுகிறேன்.

*பதிப்பாசிரியர்*

# தன் முயற்சித் தமிழியக்கம்

தமிழமைப்புக்கள்
தமிழார்வலர்கள்
தமிழாசிரியர்கள்
தமிழறிஞர்கள்
அனைவருக்கும் ஒரு வேண்டுகோள்!

**தமிழண்ணல்**

நாடு முழுவதும், உலகெங்கும் திருவள்ளுவர் கழகம், இளங்கோ மன்றம், பாரதியார் சங்கம், பாவேந்தர் பாசறை இவ்வாறு தமிழ்த்துடிப்புள்ள, செயலார்வமுள்ள, தொண்டு மனமுள்ள பல ஆயிரம் அமைப்புக்கள் உள.

தமிழார்வமுள்ள பலதுறை அறிஞர்கள், தொழிலதிபர்கள், சுழற்சங்க அரிமாசங்க ஜேசீஸ் சங்க உறுப்பினர்கள், வள்ளல்கள், தொழிலாளர்கள் (அவர்களின் சங்கங்கள் உட்பட) மகளிர்கள், மாணவர்கள் (பள்ளி, கல்லூரி மாணவர் மன்றங்கள் உட்பட) பல ஆயிரம்பேர் உளர்.

இங்ஙனம் பலநூறாயிரம் பேர் இருந்தும், தமிழமைப்புக்கள் இருந்தும், சிற்றிதழ்கள் இருந்தும் நாம் தமிழை ஓர் அங்குலம் கூட நகர்த்த முடியவில்லை; நம் குறிக்கோள்களை எட்ட முடியவில்லை.

முதலில் மேற்கண்ட அனைத்து நிலையிலும் ஐயாயிரம் முதல் பத்தாயிரம்வரை முகவரிகள் தொகுக்க எண்ணியுள்ளோம். ஆர்வம் மிக்க, தன்னார்வமுள்ள, பணி செய்யத் துடிக்கின்றவர்கள் முகவரிகள் மட்டும் போதும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**தமிழண்ணல்**
தலைவர், மதுரை எழுத்தாளர் மன்றம்
ஏரகம், 4/585 (732) முதன்மைச் சாலை,
சதாசிவநகர், மதுரை - 625 020.
பேசி: 0452-2533792, 04577-245102

செயலாக்கவழிக் கையேடுகள் அனுப்பப்பெறும். ஒருங்கிணைத்தலும் செயற்படுத்தலும் மட்டுமே குறிக்கோளாகும் இஃது ஒரு 'தன் முயற்சித் தமிழியக்கம்'

கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதனெதிர்
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று

# புலவரும் புரவலரும்

தமிழ்த்தாத்தா உ.வே.சா. பதிப்பித்த மணிமேகலை, புறப்பொருள் வெண்பா மாலை ஆகியவற்றுக்கு உதவி செய்தவர் இராமநாதபுரம் வள்ளல் பொ.பாண்டித்துரைத் தேவர் ஆவர். அவர் மதுரையில் தமிழ்ச்சங்கத்தை உண்டாக்கிப் பல நூல்களை வெளியிட்டார். அதோடு 'செந்தமிழ்' என்ற இலக்கியப் பத்திரிக்கையையும் வெளியிட்டு வந்தார். அவருடைய தாயார் 1898 ஆம் ஆண்டு இறைவன் திருவடியை அடைந்தார். அது காரணமாக இராமநாதபுரம் சென்று துக்கம் விசாரித்து வரவேண்டுமென்று ஆசிரியர் உ.வே.சா. எண்ணினார். அப்போது இராமநாதபுரத்திற்குப் புகைவண்டி இல்லை. மதுரைபோய் அங்கிருந்து வண்டி வைத்துக்கொண்டு போகவேண்டும்.

ஆசிரியரும், அவருடைய குமாரரும் சென்னையிலிருந்து புறப்பட்டு மதுரையை அடைந்து அங்குள்ள திருவாவடுதுறை மடத்தில் தங்கினார்கள். அங்கிருந்து புறப்பட்டுப் பரமக்குடி போனார்கள். வைகையில் வெள்ளம் வந்த காரணத்தினால் 3 நாள் அங்கேயே தங்கவேண்டி வந்தது. பின்னர்த் தான் இராமநாதபுரம் போய்ச்சேர முடிந்தது.

இராமநாதபுரத்தில் பாண்டித்துரைத்தேவர் தங்கியிருந்த அரண்மனைக்குச் சோமசுந்தர விலாசம் என்று பெயர். ஆசிரியர் அங்கே ஒரு மாத காலம் தங்கியிருந்தார். காலையிலும், மாலையிலும் ஆசிரியர் பாண்டித்துரைத் தேவரைச் சந்தித்து உரையாடினார். "என்னுடைய தாயார் இறந்துபோன துக்கத்தைச் சம்பிரதாயமாக விசாரிக்க வந்தீர்கள். உங்களோடு சல்லாபம் செய்து கொண்டிருப்பதில் என் அன்னை இறந்துபோன துக்கமே மாறிவிட்டது. என்னுடைய தாயர் மிகச்சிறந்தவர். அவர் வாழ்ந்திருந்த காலத்திலும் எனக்கு எத்தனையோ நன்மைகளைச் செய்தார்கள். இறந்த பிறகும் உங்களை எல்லாம் வரும்படி செய்து எனக்குத் தமிழின்பம் உண்டாகச் செய்தார்கள்" என்று அவர் நயமாகப் பேசினார்.

ஒரு நாள் பாண்டித்துரைத்தேவர் அரசராகிய பாஸ்கர சேதுபதியைப் பார்க்கப்போனார். அவரிடம் பேசிக்கொண்டிருந்து விட்டு வீட்டுக்குப் புறப்படும்போது சேதுபதி ஒரு முக்கியமான சமாச்சாரம் சொல்லவேண்டுமென்று அவரிடம் ஒரு கருத்தைத் தெரிவித்தார். "அது மிகவும் பொருத்தம்" என்று பாண்டித்துரைத் தேவர் சொல்லிவிட்டு, ஆசிரியர் தங்கியிருந்த விடுதிக்கு வந்து சேர்ந்தார். ஆசிரியர் அவரை வரவேற்று உட்காரச் செய்தார். "உங்களுக்கு மகிழ்ச்சியான செய்தி ஒன்றைச் சொல்ல வந்திருக்கிறேன்" என்று பாண்டித்துரைத் தேவர் சொன்னவுடன், "ஏதாவது புதிய நூலைப்பதிப்பிக்க வேண்டுமென்று சொல்லப் போகிறீர்களா?" என்று கேட்டார் இவர்.

"ஒரு நூல் அல்ல, பல நூல்களை நீங்கள் பதிப்பிக்கலாம். அந்த அளவுக்கச் செல்வம் அளிக்குமாறு ஒரு கிராமத்தையே உங்கள் பெயரில் எழுதிவைக்க மகாராஜா நினைக்கிறார்." என்றார் பாண்டித்துரைத் தேவர். "நான் அரண்மனை போயிருந்தேன். பாஸ்கர சேதுபதி அவர்கள் இந்தச் செய்தியைத் தெரிவித்தார்" என்று சொன்னார். "இந்நாள் வரை தங்களுக்கு எந்தவிதாமன உதவியும் அவர் செய்யாமல் இருந்தது பெரிய தவறு என்று நினைக்கிறார்கள். ஆகவே தம் ஜமீனிலுள்ள ஒரு கிராமத்தையே தங்களுக்கு வழங்க எண்ணுகிறார். இந்தச் செய்தியைத் தங்களிடம் தெரிவிக்கும்படி என்னிடம் சொன்னார்" என்றார்.

இதைக்கேட்டவுடன் பாண்டித்தரைத் தேவர் எதிப்பார்த்தபடி ஆசிரியருக்கு மகிழ்ச்சி அதிகமாக உண்டாகவில்லை. அவரிடம், "மகாராஜா அவர்களுடைய எல்லையற்ற அன்பை நான் இதனால் உணர்ந்துகொள்கிறேன். என்னுடைய கருத்தை நான் அவர்களிடமே நேரில் சொல்கிறேன்" என்று சொல்லிவிட்டார்.

ஆசிரியர் பாஸ்கர சேதுபதியைப் பார்க்கச் சென்றபோது, தம்முடைய விருப்பத்தை ஏற்று, தமக்கு நன்றி சொல்ல வந்திருக்கிறார் என்றே மன்னர் எண்ணினார். ஆசிரியரும், தம் பேச்சில், எடுத்தவுடன் இதைச் சொல்லவில்லை. சிறிதுநேரம் வேறு விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்துவிட்டு, முடிவில் சொன்னார்.

“பாண்டித்துரைத் தேவர் அவர்கள் மாகாராஜா சொல்லி அனுப்பிய செய்தியைத் தெரிவித்தார். அதன் மூலம் மகாராஜா அவர்களுக்கு என்பால் எவ்வளவு அன்பும், நம்பிக்கையும் இருக்கின்றன என்பதை உணர்ந்துகொண்டேன். எனக்கு இப்போது ஒன்றும் குறை இல்லை. ஆண்டவன் திருவருளால் கல்லூரியில் சம்பளம் வருகிறது. நான் செட்டாக வாழத் தெரிந்தவன். தாங்கள் வழங்குவதை ஏற்க மறுக்கிறேன் என்று எண்ணக்கூடாது. சமஸ்தானத்தின் நிலைமையும் எனக்கு நன்கு தெரியும். இந்த நிலையில் இப்போது அவ்வளவு பெரிய கொடையைத் தங்களிடமிருந்து ஏற்பதற்கு என் மனம் உடன்படவில்லை.” என்று சொன்னார். அப்போது அந்தச் சமஸ்தானம் பலவிதக் கடன் தொல்லைகளுக்கு உள்ளாகியிருந்தது. எனவே, ஆசிரியர் கருத்தை உணர்ந்துகொண்டு ஒரு பதிலும் சொல்லாமல் சிறிது நேரம் மௌனமாக இருந்தார் மன்னர். பின்னர், “தங்கள் விருப்பம்” என்று சொல்லி விடைகொடுத்தனுப்பினார். தமக்குக் கிடைக்க இருந்த ஒரு கிராமத்தையே தாம் இழந்துவிட்டோமே என்ற எண்ணம் ஆசிரியருக்கு எந்தக் காலத்திலும் எழுந்தது இல்லை.

நன்றி :தமிழ்த்தாத்தா - கி.வா.ஜ.

# பௌத்த சமய விசாரணை

*ஜெ.எம்.நல்லசாமிபிள்ளை*

"ஊன்கெட்டு உயிர்கெட்டு உணர்வுகெட்டு என்னுள்ளமும் போய்
நான் கெட்டவாபாடித் தெள்ளேணம்கொட்டாமோ?"

"நாமொழிந்து சிவமானவாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ."

என்றுமன்றோ அவன் பாடிப் பரவசப்படுகின்றான். இப்பிரமாணங்கள் மணிவாசகப் பெருமானின் திருவாசகத் திலுள்ளன. இன்னுமொரு பிரமானத்தையும் ஈண்டு வரைவோம்.

இன்றெனக்கருளி இருள்கடிந்துள்ளத்
தெழுகின்ற ஞாயிறேபோன்று
நின்றநின்றன்மை நினைப்பறநினைந்தே
நீயலாற் பிறிதுமற்றின்மை
சென்று சென்றணுவாய்த் தேய்ந்து தேய்ந்தொன்றாம்
திருப்பெருந்துறையுறைசிவனே
யொன்றுநீயல்லையன்றி யென்றில்லை
யாருன்னையறியகிற்பாரே,

இதிலடங்கிய உபமான உபமேயங்களைப் பின்வருமாறு விரிக்கலாம். ஞாயிறு கீழ்த்திசையின் கோடியில் உதித்து உச்சியில், அதன் பூரணப்பிரகாசம் பெறுகின்றது. ஒருவனை அவனுடைய நிழலுடன் காலைமுதல் மதியம்வரைப் பார்ப்போம். உதய காலத்தில் அவன் நிழல் மிகவும் நீடித்திருக்கின்றது. சூரியன் உயர எழஎழ அவன் நிழல் குறுகிக்குறுகி, உச்சியில் முற்றும் கெடுகின்றது. நாம் நினைப்பது சூரியன் நம்மை நோக்கி வருவதாக. உண்மையில் நாமே அவனை எதிர்கொண்டு செல்கின்றோம். ஆயின் அவன் நம்மை நோக்கிச் செல்வதும் உண்மையே. ஏனெனில் அச்சூரியன் வலியினாலன்றி, பூமியும் அவனைச் சுற்றிச் செல்லா. இதில், சூரியன், பதியும், மனிதன் பசுவும், அவன் நிழல், ஆணவம், அகங்காரம், அஞ்ஞானம்,

பாவம் எனக் கொள்ளவேண்டும். ஆன்மா கடவுளைநோக்கி நீயல்லாற் பிறிதுமற்றின்மை நினைப்பற நினைத்து சென்று நெருங்கவும் ('சென்றுசென்று') அவன் பாசமாகிய நிழல்வரவரத் 'தேய்ந்துதேய்ந்தும்' கடைசியில் அப்பரஒளி தன்னை முற்றிலும் கவர்ந்து விழுங்குதலால் நான் என்பதும் கெட்டு மீண்டு நிற்பது திருப்பெருந்துறைச் சிவன் ஒருவனேயாவன்.

"ஆறாவமுதே யயில்வே லரசே
ஞானா கரனே நவிலத் தகுமோ
யானாகிய என்னை விழுங்கிவெறுந்
தானாகிநின்றதுதற்பரமே"

அதன் பேருக்கியைந்த கந்தர்அநுபூதி என்னும் அற்புத ஆனந்த நூலில் அருணகிரியார் இந்த உண்மைகளை இன்னும் பலவிதமாய்க் காட்டியிருக்கின்றனர்.

"எல்லாமற என்னை இழந்த நலம்"

"குறியைக் குறியாது குறித்தறியும்
நெறியைத் தனிவேலை நிகழ்த்திடலும்
செறிவற்றுலகோ டுரை சிந்தையுமற்
றறிவற்று அறியாமையு மற்றதுவே"

"அறிவொன்றறநின்றறிவாரறிவில்
பிறிவொன்றறநின்றபிரானலையோ
செறிவொன்றறவந்திருளேசிதைய
வெறிவென்றவரோடுறும்வேலவனே"

"ஆசாறிகளைந்துகளாயினபின்
பேசா அனுபூதி பிறந்ததுவே"

கடை இவ்விரண்டிடிகளும் பூர்வ பட்சசித்தாந்தங்களின் பாகுபாடுகளை செவ்வனே விளக்குகின்றன. புத்தன் "ஆசாறிகளைந்துகள் ஆக்கு" என்று மட்டுஞ்சொல்லி நிற்பன். சித்தாந்தி, அதன்மட்டு நில்லாது "பேசா அனுபூதிபிறந்த

தென்றும்" பகர்வன். இத்துடன், தேவர் குறளினின்று சில மேற்கோள்களை சொற் பொருள்களிலும் ஒத்துப்பார்க்கலாம், அவரைச்சிலர் புத்தராகவும் சைனராகவும் எண்ணுகின்றாராகலின், எனினும் அவர் ஜீவன் ஈசுவரன் வீட்டுலகம் உண்டென்று மதித்தார் என்பதற்கு ஐயம் கிடையாது, அதனை ரகசியமாகவும் மூடிவைக்கவில்லை. கௌதமருடன் "அவாவென்ப எல்லாவுயிர்க்கு மெஞ்ஞான்றும், தவா அப்பிறப்பீனும் வித்து" என அருளிச்செய்து "பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்" என்று பின்னுங்காட்டி அப்பற்றுவதற்கு முக்கியசாதனம் பரமேசுவரனது பாதார விந்தங்களிற் பத்திபண்ணுதலே என்று சித்தாந்தம் செய்தார்.

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றை
பற்றுக பற்று விடற்கு"

இருள் ஒளி என்னும் உபமான வாயிலாக, பாசநீக்கத்தையும் பதியிற் கலத்தலையும் பின்வரும் குறளாலருளிச் செய்கின்றார்.

"இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு"

இருள் நீக்கம், மருள் நீக்கம், ஒருபக்கமாகம், மாசறு காட்சி இன்பம் பயத்தல் மறுபக்கமாதலும் கூர்ந்து கவனிக்கற்பாலது. இக்கருத்தினையே

"இருள்சேர் இருவினையும்சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு"

"சார்புணர்ந்து சார்புகெட வொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்"

என்ற திருக்குறள்களும், முதலதிகாரத்தில் உள்ள மற்றைக் குறள்களும் விளக்குகின்றன.

இனி கீதையினை எடுத்து, 4, 5 அதிகாரங்களைப் படிப்போமானால் இவ்வுண்மைகளே சொல்சொல்லாய் மீண்டும் காணப்படுகின்றன. தம் பிரபுக்களில் ஒருவர் கூறியபடி,

கீதையைக் கடைமுதலாகக் கொண்டு மாறிப்படிக்கவேண்டும். அப்பொழுது 4, 5 அதிகாரங்களுக்குள்ள சம்பந்தம் விளங்கும். 5ம் அதிகாரம் கர்மசந்நியாச யோகத்தைப்பற்றியும் 4ம் அதிகாரம் ஞானயோகத்தைப் பற்றியும் தமிழ் மேற்கோள்களிலுள்ள அதேசொற்களாலும் உவமானங்களாலும் பாசக்ஷய பதிஞான உண்மைகள் விளக்கப்பட்டிருக்கின்றன.

"பற்றைவிட்டு, என்னிடம் எல்லாக் கர்மங்களையும் அர்ப்பணஞ் செய்து (பணியாக்கி) நிற்கின்றானோ அவனைப் பாவம்பற்றா, தாமரையிற்றுளி போல்"

வினைப்பயனைவிட்டு, இருவினையொப்பு (சாந்தம்) அடைந்தவன் பரமசாந்தத்தையடைகிறான். அவ்வொப்பு அடையாதவர்கள், அவா எழுப்ப வினைப்பயன் நுகர்ந்து கட்டுப்படுகிறார்கள். கடவுள் அசேதனப் பிரபஞ்சத்துக்கு உபதாகர்த்தாவென்றும், இருவினைக்கும் காரணம் அவனேயென்றும் மயங்கிக்கூறும் அவலமார்க்கத்தை 14, 15வது செய்யுட்களால் நிராகரிக்கிறார். இதைவிடப் பெருந்தப்புக் கிடையாது.. பிரகிருதி பிரதானம் மாயை என்று சொல்லப்பட்டது, தனுகரணபுவன போகமாகிய சடப்பிரபஞ்சத்தின் முதற்காரணமாகும். உண்மையில் பிரகாசமுள்ள ஆன்மாவை ஆசை அஞ்ஞானம் ஆணவமலம் என்னும் அழுக்கு மூடிநிற்கின்றது. எப்படியெனில் பளிங்கை அழுக்குப் போலவும், நெருப்பைப்புகை போலவும் கருவைப் போலவும் உண்மையில் பதிஞானத்தால் எவனுக்கு அஞ்ஞானம் அடிபட்டுப்போகிறதோ, அவனுக்கு பரமேசுவரன் சோதிபிரகாசமாயெழுகின்ற ஞாயிறு போன்று விளங்குகின்றான்.

"தன்னை (கடவுளை) நம்பித் தன்னை நினைந்து தன்னில் ஈடுபட்டு தன்னில் எவர்கள் அழுந்துகின்றர்களோ அவர்கள் பாபம் ஞானத்தால் பட்டுப்போய், என்றும் மீளா இன்பத்தைப் பெறுகிறார்கள்."

"பாவம் கழன்று, பேதமற்று, சிந்தைதெளிந்து எவ்வுயிக்கும் செந்தண்மை பூண்டொழுகும், ரிஷிகள் பிரம்மநிர்வாணத்தை யடைகிறார்கள்." (25) என்னையே யக்யம் தபசுகளின் பலனை நுகர்வானும் கொடுப்பானுமாகவும், எல்லா வுலகங்களுக்கும் மகேசுவரனாகவும் எல்லாவுயிர்களுக்கும் மங்களம் செய்பவனாகவும் எவர்கள் அறிகிறார்களோ அவர்கள் சாந்தி நிர்வாணத்தையடைகிறார்கள்" (29) கீதைக்கு விருத்தி செய்தோர்களும், பிர்ம்ம நிர்வானத்துக்கு, பிர்ம்மலயம், பிர்மமானந்தம், மோக்ஷமென பொருள்காட்டியிருக்கின்றனர். ஆக பௌத்த தந்திர நிர்வானம் இவ்விருபக்கமாய் யாம் மேல் விளக்கியுள்ள அத்துவித சித்தாந்தம் ஆகுமோ? அவ்விரண்டும் ஒன்று சேருவதெப்படி? ஆனால் இருவரும் ஒரு நெறியிற்சென்று கேடயந்தாங்கிய் வீரக்கழலினிடம் சேர்ந்ததுண்டு.

ஆனால் ஒருவன் ஒளிக்குப் புறம்பாய் இருள்மூடப்பட்ட கேடயத்தின் பின்பக்கத்தையே பார்த்துக் கருமையென்றே சாதிக்கின்றான். முன்புறம் போய் அருணன் கிரணம்படத் தகதகவென்று விளங்கும் மற்றப்பக்கத்தையும் பார்க்க மாட்டேனென்று சொல்லுகிறான். அப்படிப் பார்க்கிறவனோ, அப்பேசரும் பிரகாசம் காணப்பெற்று நிர்வாணமென்னும் பதத்துக்கு நாம் முன்னர் உள்ளமுணர்வின் பற்றின்கேடு என எழுதியது உண்மையென்போம். உள்ளமும் உணர்வுமே சாந்தி ஆனந்தத்தில் அழுந்துவது, உண்மையோ? உள்ளம் உணர்வைவிட மேலொரு தத்துவங்களில்லையோ? ஆன்மா பரமான்மா வென்பதொன்றில்லையோ? அல்லது இந்து மதப்படி ஆன்மா கடவுள் என்னும் பதார்த்தங்களுமே.

# இராமன் மௌனியாகிவிட்ட மூன்றிடங்கள்

*முனைவர். இ.கி.இராமசாமி,*

1.0. பேசவேண்டிய இடத்தில் நேரத்தில் சூழ்நிலையில் பேசாமல் இருப்பதோ, அல்லது பேச முடியாமல் போய்விடுவதோ, அல்லது பேச்சை அடக்கிக் கொண்டிருப்பதோ மௌனமாகும். இதில் தவயோகிகள் காக்கின்ற மௌனம் ஆன்மிகம் சார்ந்தது. இராமகாதையுள் மூன்று இடங்களில் தன்னேரில்லாத் தலைவனாகிய இராமன் மௌனியாக நின்றான். இலக்குவன் பாசமுடன் கேட்ட கேள்வி, சீதை உரிமையோடு கேட்ட கேள்வி, பாதிக்கப்பட்ட வாலி எழுப்பிய வினா ஆகிய மூன்றுக்கும் பதில் சொல்லாமல் நின்றான் இராமன். அந்த மௌன நிலைகள் அவனுக்குப் பெருமை சேர்த்தனவா என்பது நம்முன்னுள்ள சிக்கல்.

1.1. வானகம் நோக்கிய பயணத்தை மேற்கொண்ட இராமன், தன் பாசமிகு தம்பி இலக்குவனைப் பார்த்து, 'வானளாவிய புகழுக்கு உரியவனே; மறுப்பு ஏதும் சொல்லாமல் நான் சொல்லும் உறுதிச் சொல்லைக்கேள். அன்னையரும் நம் தந்தை தயரதனும் முன்னைய நிலையில் இல்லை. என்னைப் பிரிந்து அவர்களால் இருக்க இயலாது. அவர்கள் எந்தத் துன்பமும் அடையாமல் என்பொருட்டு அவர்களின் அருகிலிருந்து நீ உதவுவாயாக. இது என் வேண்டுகோள்!' என்றான். இதைக்கேட்ட இலக்குவன் அதிர்ந்து தோள் துவண்டுபோனான்; விம்மி மூச்சுவிட்டான். 'ஐயா நான் உனக்கு என்ன பிழை செய்தேன். உன்னைப் பிரிந்து என்னால் எப்படி இங்கு இருக்க இயலும்' என்று கேட்டான்.

"ஆண்தகை அம்மொழி பகர, அன்பனும்
தூண்தகு திரள்புயம் துளங்க, துண்ணெனா
மீண்டது ஓர் உயிர் இடை விம்ம விம்முவான்
' ஈண்டு உனக்கு அடியனேன் பிழைத்தது யாது'
என்றான் (கம்ப. 1756)

இலக்குவன் மேலும் பொங்கி வேதனையுற்று 'நீ காடு செல்வாய் என அறிந்து எனக்குள் தோன்றிய சினத்தைத்

தவிர்க்கும்படி சொன்னாய். அதனைக்கூடத் தாங்கமுடியாமல் தாங்கிக் கொண்டேன். அதைவிடக் கொடியது நீ இப்போது சொன்னசொல்' என்றான். உனக்கே உரிய நாடாளும் உரிமையை இழந்து விட்டதுபோல் என்னையும் கைதுடைத்து விட்டுப் போகத் துணிந்தனையோ ஐயா!' என்று கேட்டான்.

"செய்துடைச் செல்வமோ, யாதும் தீர்ந்து, எமை
கைதுடைத்து ஏகவும் கடவையோ? ஐயா" (கம்ப. 1760)

இலக்குவனின் ஆன்மக் குமுறல் கேட்ட அண்ணனுக்கு இதற்குமேல் பேச இயலவில்லை.

"உரைத்தபின் இராமன் ஒன்றும் உரைக்க நேர்ந்திலன்" (கம்ப. 1761)

பாசத்தினாலும் உணர்ச்சிப் பெருக்கினாலும் வாயடைத்துப் போய் மெய்ப்பாடுகள் மட்டுமே செயல்பட நின்றான் இராமன். அவனுடைய தாமரைக் கண்கள் மிக்க நீரை நிலத்திடைச் சொறிய நெடிது மௌனியாகி நின்றான்.

"தென்சொற் கடந்தான் வடசொற்கலைக்கு ஓர் எல்லை தேர்ந்தான்"

என்ற அளவுக்குப் பேச்சாற்றல் படைத்த இராமன் இங்கு மௌனியானான். தன்னை உணர்ந்தாரைத் தான் நன்குணர்ந்தவன் இராமன், ஆகையால் இலக்குவனுடைய வற்றாத பாசம் அவனைக் கட்டிப்போட்டுவிட்டது. தம்பியரின் பாசத்துக்கு இராமன்அடிமை என்பதால் இங்கு அவன் மௌனியானது அவனை ஓங்கு புகழுக்கு உரியவனாக்கியது.

1.2. இயங்கு பல்லுயிர்க்கும் ஓர் உயிர் என விளங்கும் இராமன் சீதை முன்னர் ஒருமுறை மௌனியானான். மெய்த்திருப்பதம் மேவு என்ற போதும், அத்திருத் துறந்து வனம் ஏகு என்ற போதும் அவன் முகத்திலும் உள்ளத்திலும் மாறுபாடு தோன்றியதில்லை. அப்படிப்பட்டவன் மரவுரி தரித்துச் சீதையின் முன் வந்து நிற்கின்றான். இக்கோலத்தையோ, அவன் பயணத்தையோ அவள் எதிர்பார்க்கவில்லை. இராமன் தனியனாகவும் வரவில்லை; தாயர், அருந்தவசிகள், சான்றோர் சூழ வந்தான். அந்தத் துயரக்காட்சியைக் கண்டு 'நடந்தது என்ன?' என்று கேட்டாள். 'என் தம்பி நாடு ஆள்வான். தந்தை,

தாய் ஆகிய இருவரின் ஆணைப்படி காட்டுக்குப்போய்த் திரும்புவேன். வருந்தாதே' என்றான். சீதைக்கு நடந்தவைகள் புரிந்துவிட்டன. நடந்தவற்றை எண்ணி அவள் நைந்து போகவில்லை. 'நீ வருந்தாதே. நான் போகிறேன்' என இராமன் பிரித்துப் பேசியதைத்தான் அவளால் தாங்க முடியவில்லை. அவள் நிலையை உணர்ந்த இராமன், ஏன் அவளை விடுத்துப்போக நேர்ந்தது என்பதைக் குறிப்பாகச் சொன்னான். 'அந்தக் காட்டின் வெம்மையை பொறுக்கும் திறம் உன் கால்களுக்கு இல்லை' என்றான். கானகத்தின் சூடு, காகுத்தனைப் பிரிவதால் ஏற்படும் சூடு, இவற்றில் எது பெரியது? கொடுமையானது என்பது சீதைக்குத் தெரியாதா? அன்பை அடியோடு நீக்கி, ஒரு பற்றும் இல்லாமல் இராமன் பேசுகிறானே! என நினைத்த சீதை,

"நின் பிரிவினும் சுடுமோ பெருங்காடு"

என்று கேட்டாள். இராமன், 'என்ன செய்யலாம், என்ன பதில் கூறலாம்' என்று எண்ணிக் கொண்டிருக்கும் பொழுதே சீதை அரண்மனைக்குள்ளே சென்று மரவுரி தரித்துக்கொண்டு இராமன்முன் வந்து நின்றாள். அவளுடைய மனநிலையைக் கண்ட இராமன், 'இனி என்னவெல்லாம் நடக்கும் என்பதை நீ எண்ணிப்பார்ப்பவளாக எனக்குத் தெரியவில்லை; எனக்கு எல்லையற்ற இடர் தருவாய்' என முன்னோக்கு மொழி கூறினான். இராமன் மிகவும் இரக்கத்துடன் அம்மொழிகளைக் கூறினான்; ஆனால் கோகுலம் போன்ற சீதை சினந்தாள். 'நான் உன்னோடு வருவதுதான் உனக்குத் துன்பமா? அப்படியானால் என்னைத் துறந்து போய்விடுவது உனக்கு இன்பம் தரும் செயலோ!' என்று கேட்டாள்.

"உற்று நின்ற துயரம் இது ஒன்றுமே?
என் துறந்தபின் இன்பம் கொலாம் என்றாள்" (கம்ப. 1832)

இதுகாறும் தன்னை எதிர்த்துப் பேசாத பெண்மை இன்று பேசிவிட்டதே; சீதையைத் துறந்து செல்வது தனக்கு எப்படி இன்பமாக இருக்க முடியும். காதல் துணைவியின் பேச்சு அவனைக் கட்டிப்போட்டுவிட்டது. இல்லறத்தின் சீர்மையைப் புலப்படுத்த இங்கு மௌனமானான் இராமன்.

1.3. இனி, இராமன் மௌனியாகிவிட்ட பிரச்சினைக்குரிய மற்றோர் இடம் வாலிவதமும், வாலியின் வாதமும் ஆகும். மேற்சுட்டிய இரண்டு இடங்களிலும் இராமனுக்காக வேறுயாரும் பேசவும் முன்வரவில்லை என்பதை மனங்கொள்ளுக. இந்த இரண்டு இடங்களிலும் இறுக்கமான பாசவுணர்வும் காதலும் வெளிப்படுகின்றன. இங்குப் போரும் மரணமும் நிகழவில்லை. ஆனால் வாலிவதையில் போரும் மரணமும் நேர்ந்த நிலையில் அதற்குக் காரணமான இராமன் மௌனியாக நிற்க, இலக்குவன் பேசினான்.

செல்வம், வரம் முதலியவற்றாலான செருக்கும், சேர்ந்தாரைக் கொல்லும் சினமும், தம்பியின் ஆருயிர் மனைவியைப் பிடுங்கிக் கொண்டு பெண்டாண்டதும் ஆகிய மூன்று குற்றங்கள் புரிந்தவன் வாலி. சுக்கிரிவன் இராமனுடைய அன்பனாகிவிட்டான். இராமனுக்கு ஒரு குறிக்கோள் உண்டு. தன் அன்பன் எளியவனாக இருந்தாலும் அவனுக்கு நேர்ந்த தீமையைத் தீர்ப்பது இராமன் கருத்தில் பதிந்த குறிக்கோள். அவ்வகையில் வாலியை வதம் புரிந்தான். மனுநீதிப்படி நடந்து கொண்டான் என்றே சொல்லவேண்டும். வானவனோ, நரனோ, எப்பிறப்பினனானாலும் எக்குலத்தவனானாலும் அவன் செய்த வினைக்குரிய பயனை அனுபவித்தேயாக வேண்டும். மனுநீதியை அறிந்த வாலி அவன் தம்பி சுக்கிரீவன் மனைமாட்சியை அழித்தவன். எனவே அவனுக்கு வழங்கிய தண்டனையில் தவறு இல்லை. தண்டனை வழங்கிய முறையில் தவறு இருக்கலாம் என்ற ஐயத்தை இராமனின் மௌனம் உண்டாக்கிவிட்டது. மறைந்து நின்று அம்பு போட்டமை இராமனுக்கே தவறாகப் பட்டதோ! என்னவோ!

"அவ்வுரை அமையக் கேட்ட
அரிக்குலத்து அரசும். 'மாண்ட
செவ்வியோய்! அனையது ஆக!
செருக்களத்து உருத்து எய்யாதே
வெவ்விய புளிஞர் என்ன
விலங்கியே மறைந்து நின்று
எவ்வியது என்னை' என்றான்;
இலக்குவன் இயம்ப லுற்றான்" (கம்ப. 4058)

ஆம்.. வாலியின் நேரடியான வினாவுக்கு, பழிசாற்றிய வினாவுக்கு இராமன் விடை சொல்லவில்லை; சொல்ல முடியவில்லை. விடை சொல்லியிருக்க முடியாது. சொல்லியிருந்தாலும் அது பொருந்திய விடையாக, அறநெறிப்பட்ட விடையாக இருக்க முடியாது. காரணம், இராமன் வாலி மீது அம்பு போட்டது, முன்கூட்டியே திட்டமிட்ட செயலாகும்.

இராமன் மௌனியாகிவிட, வாலியின் கேள்விக்கு இலக்குவன் பதில் கூறுகின்றான்.

"முன்புநின் தம்பி வந்து சரண்புக
முறை இலோயைத்
தென்புலத்து உய்ப்பென் என்று செப்பினன்;
செருவில் நீயும்
அன்பினை உயிருக் காகி
அடைக்கலம் யானும் என்றி
என்பது கருதி அண்ணல்
மறைந்து நின்று எய்தது என்றான்" (கம்ப. 4059)

'முதலில் உன் தம்பி வந்து என் தமையனாரிடம் சரண் அடைந்தான். அந்த அடைக்கலத்தை ஏற்று, முறைதவறிய உன்னை மாய்த்துவிடுவதாக உறுதி கூறிவிட்டார். இந்த நிலையில் போர்க்களத்தில் இராமனைக் கண்டு நீயும் அடைக்கலம் வேண்டி நின்றால், இராமன் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலாது போகும். இந்த இக்கட்டான நிலையைத் தவிர்ப்பதற்காகவே இராமன் மறைந்திருந்து கணைதொடுக்க வேண்டியதாயிற்று' என்பது பாட்டின் பொருள். வான்மீகி ராமாயணத்தில் இச்செய்தி இல்லை. கம்பராமாயணத்தில் மட்டுமே இச்செய்தி காணப்படுவதாகும். தக்க சமயத்தில் இப்படி அண்ணனைக் காப்பாற்றிய தம்பி இலக்குவன் ஒருவனாகத்தான் இருக்க முடியும். இலக்குவன் பேச்சு வாலியைச் செம்மைப் படுத்தியது. அவன் சிறியன சிந்தியாதவனாக வளர்ச்சி பெற்றான். 'அன்ன கட்டுரை கருத்துள் கொண்டான்' என்கின்றார் கம்பர். இலக்கியத்தில் அறிவுக் கண்கொண்டு ஆராய்கின்ற இடங்களும், உணர்ச்சியைக்கொண்டு ஆராய்கின்ற இடங்களும் உண்டு. இங்கு அறிவும் உணர்வும் கலந்த இலக்கியப் பார்வை, இராமனுடைய மௌனத்தைப் புரிந்துகொள்ள உதவும்.

# திருவெம்பாவை 8

*பேராசிரியர் சுப.அண்ணாமலை*

ஏழைபங்காளனையே பாடு!

வைகறைப் பொழுது முடிவடையும் நேரம். இருள் மெல்ல விலகுகின்றது. கிழக்குத் திசையில் வெண்மை தலை காட்டுகின்றது. தோழிகள் பலரையும் எழுப்பி அழைத்துக் கொண்ட பெண்கள், கடைசியாக ஒருத்தியின் வீட்டிற்கு வருகின்றனர். அவள் படுத்திருக்கின்றாள். கண்களும் விழித்திருக்கின்றன. ஆனால் அவள் ஒன்றும் பேசவில்லை. அவர்கள் வந்ததை அவள் கவனித்ததாகவே தெரியவில்லை. உறக்கத்தில் இது புது வகையாக இருக்கிறதே என்று வியந்த பெண்களில் ஒருத்தி சொல்லுகிறாள்

பெண்ணே, கோழி கூவிவிட்டது. அதைத்தொடர்ந்து, பறவைக் கூட்டங்கள், ஆங்காங்கே, இனிமையாக ஓசை செய்கின்றன.

"கோழி சிலம்ப சிலம்பும் குருகு எங்கும்" என்கின்றாள்.

இயற்கையில், இன்பக் காலைப்போதில், எழுகின்ற இந்த இனிய ஓசை, வானவெளியில் சோதி மயமாக வரவிருக்கும் சூரியனுக்கு அளிக்கும் வரவேற்பு என்று அந்தப்பெண் கருதுகிறாள். அந்நேரத்தில், கோவிலில் சங்கு முழங்குகின்றது. அதைத் தொடர்ந்து நாகசுரம் இசைக்கின்றது. சங்கோசையில் 'ஓம்' என்ற பிரணவ மந்திரத்தையே கேட்கின்றாள் அந்தப்பெண். நாகசுரத்தின் ஓசையில் மிதந்து வரும் பள்ளியெழுச்சிப் பாடலையும் அவள் இனம் கண்டுகொள்கிறாள். கோழியும் பறவைகளும் பொருள் இல்லாத வெற்றோசை எழுப்பிச் சூரியனை வரவேற்பதாகவும், அதே நேரத்தில், கோயிலில் முழங்கும் சங்கும் நாகசுரமும் பொருள் நிறைந்த மந்திர முழக்கமும் தமிழ் முழக்கமும் செய்து, மக்களின் ஆன்மப் பெருவெளியிலே எழுந்தருள இருக்கும் இறைவனாகிய அரும் பெருஞ்சோதிக்கு வரவேற்பு அளிப்பதாகவும் அந்தப்பெண் நினைக்கிறாள். அதனால் வெற்றோசையைக் குறிக்கும் 'சிலம்பு' என்ற சொல்லைப் பயன்படுத்திக் 'கோழி சிலம்பச் சிலம்பும்

குருகு எங்கும்' என்று கூறியவள், 'இசைக்க' என்றும் 'கூற' என்றும் இரண்டு பொருள்படும், "இயம்ப" என்ற சொல்லைப் பயன்படுத்தி,

"ஏழில் இயம்ப. இயம்பும் வெண்சங்கு எங்கும்" என்று கூறுகிறாள்.

நாகசுரமும் சங்கும் கோவிலில்தான் முழங்கின. ஆனால் அப்பெண்ணின் கருத்து, அவற்றிலேயே ஊன்றிவிட்டதால் எங்கும் அவை முழங்கியதாகப்பட்டது.

அவற்றால் துதிசெய்து வரவேற்கப்படும் இறைவனைப் பற்றி அந்தப்பெண் எண்ணிப் பார்க்கின்றாள். கோழியும் பறவையும் என்னவோ பெரிய அதிசயத்தைக் கண்டதைப் போல வரவேற்கும் இந்தச் சூரியன் இறைவனுக்கு நிகராவானா? எத்தனை கோடி சூரியர்கள் சேர்ந்தாலும் ஒப்பாக மாட்டாத அரிய, பெரிய, மேலான ஜோதி இறைவன். சூரியன் முதலிய எண்ணற்ற கோள்களுக்கும் நட்சத்திரங்களுக்கும் ஒளிவழங்குபவன் இறைவன். ஆயினும் அவனது ஒளிமயத்தை நம் கண்ணால் தரிசிக்க முடியாது. மெய்யுணர்வு உடையோரின் அகக்கண்ணுக்கு - அவர்கள் ஆன்மப் பெருவெளியில், தரிசனம் தந்து விளங்குபவன் அவன். ஆதலால் அவனைப் பரஞ்சோதி என்கிறோம். அண்டங்கள் எல்லாவற்றையும் கடந்து, அப்பால் உள்ள பரஞ்சோதியாகிய அவன், இங்கு, இவ்வுலகில் எளியவராம் அடியாரின் அன்பிற்கு வசமாகி, அவர்களின் உள்ளக் கோவிலில் உதயமாகி விளங்குகின்றான். இது அவனது பெருங்கருணையாகும். எல்லா உயிர்களும் இன்புற்று வாழவும், படிப்படியே அறிவு பெறவும் இறைவன் திருவருள் புரிவது அவனது பொதுவான கருணையால். ஆனால், பக்தியும் இறைப்பணியும் மேற்கொண்டு, இடையறாது இறைவனை நினைந்து, அவன்வழி நடக்கும் அடியவருக்கு ஒப்பற்ற சோதிமயமாய் - அவரின் உள்ளே, ஆன்ம உலகின் அண்ணாமலைத் தீபமாய்த் தரிசனம் தருவது, அவனது பரங்கருணை. இக்கருணையால் அவன் ஆற்றும் பெரும் புகழ்வாய்ந்த செயல்கள் எத்தனையோ; எத்தனையோ!

அவற்றைப் பாடிக்கொண்டு, உன்வாசலில் வந்து நிற்கிறோமே! எமது பாடல் உனது செவியில் விழவில்லையா? உன் கண்கள் திறந்திருந்தும் வாய் திறக்கவில்லையே! ஈதென்ன புதுவகையான உறக்கம்?

"கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ?
வாழி! ஈதென்ன உறக்கமோ? வாய்திறவாய்"

அந்தப்பெண் உண்மையில் உறங்வில்லை. ஆனால் அவள் ஏன் பேசவில்லை? இறைவனின் நினைப்பில் ஆழ்ந்து, அதில் உண்டான ஆனந்தத்தால், அமைதி மயமாகி விட்டாள். தோழிகள் எந்தப் பரஞ்சோதியைப் பாடினார்களோ, அவனைத் தன் உள்ளத்திலே கண்டுகொண்டிருந்தாள். எந்தப் பரங்கருணையை அவர்கள் பாடினார்களோ, அதை அனுபவித்துக் கொண்டிருந்தாள். அதன் விளைவுதான் இந்த மௌனம்.

அதைப் புரிந்துகொள்ளாத தோழிகள் இது புதுவகையான உறக்கம் என்று எண்ணிவிட்டார்கள். அவர்கள் பேச்சுத் தொடர்கிறது.

"அடி பெண்ணே, இறைவனிடம் எனக்கு அன்பு உள்ளது என்று சொல்வாயே! இதுதான் அன்புடைமையா? அன்பு இருந்தால் எங்களுடன் சேர்ந்து பாடவேண்டாமா? நீ உய்ய வேண்டுமானால், உலகங்கள் அனைத்தையும் ஊழிக்கால முடிவில் ஒடுக்கிக் கொள்ளும் சங்கார காரணனை - பிறகு திருவருட் சக்தியாகிய உமாதேவியை இடப்பங்கில் கொண்டு, சதாசிவனாக விளங்கி, மீண்டும் உலகங்களைப் படைப்பவனை ஒப்பற்ற அந்த இறைவனைப் பாடுவாயாக" என்று கூறுகின்றனர்.

"ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ?
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழை பங்காளனையே பாடுஏல் ஓர் எம்பாவாய்"

# சிலப்பதிகாரம் அகநிலைக் கட்டமைப்பு

*பேராசிரியர். தமிழண்ணல்*

காப்பியக் கட்டமைப்பு (Epic Structure) என்பது, தனிச் சிறப்புடையது. சேக்சுபியர் - நாடகங்கள் தனித்தன்மை வாய்ந்த நாடகக் காப்பியக் கட்டமைப்புடையவை. தமிழில் தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலின் 'கட்டமைப்பு' வியப்பிற்குரியது.

ஒரு காப்பியக் கட்டினை அகநிலை, புறநிலை என இரண்டாகப் பிரிக்கலாம். அகநிலை கதைக்கரு, கதை கதைமாந்தர், உத்தித் திறன்களால் அமையும் கட்டமைப்பு; புறநிலை தொடக்கம், தொடர்ச்சி, கதைக் கோப்பு, முடிவு போல்வனவற்றால் அமையும். இதனால் ஒரு காப்பியம் பற்றிய முழுமையான திறனாய்வாக இஃது அமைகிறது.

ஒரு காப்பியம் நுண்கலைச் சிற்பக் கட்டிடம் போல்வது. அதற்கு ஒரு முகப்புண்டு, தோற்றமுண்டு, உறுதியான கட்டமைப்பு உண்டு, முடிவுண்டு, கட்டிடம் முழுவதும் நுண்திறனுள்ள சிற்பக் கலையுண்டு, ஆங்கிலத்தில் சிற்பக்கலைக் கட்டிட இயலும், அறிவுக் கலைகளின் நுண்கலை ஒருங்கமைப் பியலும் 'ஆர்க்கிடெக்டானிக்சு' (Architectonics) எனும் ஒரே சொல்லால் குறிக்கப்படுகின்றன.

சிலப்பதிகாரத்தினைப் போலக் கட்டமைப்பும் சிற்பத் திறனும் இசை நாட்டியக் கலைச்செல்வமும் பொதுளிய பிறிதொரு காப்பியம் உலகில் வேறொன்றில்லை எனத் தலைநிமிர்ந்து கூறலாம்.

அத்தகைய கட்டமைப்பில், அகநிலை சார்ந்தவை பலவுள. அப் பலவற்றுள்ளும் ஒன்றே ஒன்றினை மட்டும் இங்கு காண்போம்.

'கட்டுரையாளனின் கலை' (Art of the Essayist) எனும் ஆங்கிலக் கட்டுரை ஒன்றில், கீழ்வருமாறு குறிக்கப் பெற்றுள்ளது:

“ஒரு பொருள் பற்றி எழுதத் தொடங்கும்போது, முதற் பத்தியிலேயே, சொல்லவந்த செய்திக்கு வந்தவிடுக; இன்னும் முடியுமானால் முதல் தொடரிலேயே, மேலும் இயலுமேல் முதற் சொல்லிலேயே தான் சொல்ல எண்ணும் செய்திக் கருப்பொருளை உணர்த்துமாறு தொடங்கிவிடுக.”

இளங்கோவடிகள் தாம் படைத்த காப்பியத்தைத் திட்டமிட்டு அமைத்துள்ளார். அதாவது கட்டமைப்பு, திறன்கள் யாவும் தாமாகவோ, எதிர்பாராமலோ அமைந்தவை அல்ல. அவை, அவர் நன்கு எண்ணி, திட்டமிட்டு அனைத்தையும் படைத்துள்ளார். இது பலநிலையிலும் உறுதிப்படுகிறது.

கண்ணகியைக் கதைத் தலைவியாக்குவதும் மானுடப் பெண்ணாகப் பிறந்த அவள், வானுறையும் தெய்வமானாள் என்பதும் அவர் படைக்க எண்ணியன.

கண்ணகி ‘போதில் ஆர் திருவினாள்’ -திருமகள் போலும் வடிவுடையவள். அதாவது காமஇச்சை தோற்றாது, வணங்கத்தக்க தெய்வீக அழகுடையவள். தீது இலாத வடமீனின் (அருந்ததியின்) திறம் உடையவள். அதாவது குணநலனில் கற்புக்கு அரசியாவாள். ஆதலால் மாதரார் அவளைக் கண்டதும் ‘தொழுது ஏத்தி’ப் போற்றுகின்றனர்.

பெண்கள் ‘ஒள்ளிழை மகளிர் உயர்பிறை தொழுவர்’ எனப் பல இடத்தும் வருவதைச் சங்கப் பாடல்களில் காணலாம். கண்ணகியும் அந்தத் ‘திங்களைப்’ போலத் தொழத் தக்கவளாகத் தோன்றினள். கண்ணகியைக் கதைத் தலைவியாக்க எண்ணிய அவர், அவள் திருவடிகளில் அணிந்திருந்த ‘சிலம்பு’ காரணமாகவே, கதை வளர்ந்ததாகலின், சிலப்பதிகாரம் என்றே பெயரிட்டார். சிலப்பதிகாரம் என்னும் பெயரால், நாட்டுதும் யாம் ஓர் பாட்டுடைச் செய்யுள் எனத் தொடங்கினார். இறைவனின் தாளினைத் தொழுவதைத் திருவள்ளுவரும் ‘நற்றாள் தொழுதல்’ என்றும் ‘இறைவன் அடி சேர்தல்’ என்றும் கூறுவார். அவ்வகையில், தாம் கடவுளாக்கி வணங்கிய மங்கல

மடந்தையின், தாளில் அணிந்திருந்த, சிலம்பு மூலமே தம் காப்பியத்தை படைத்தார், அவர்.

கண்ணகியைத் 'திங்கள்' எனும் படிமமாக்கித் தொடங்குகின்றார். திங்கள் தொன்மப் படிமம் (Mythical Symbol); அது கண்ணகியைக் குறிக்கும். கண்ணகி தெய்வமானதும், செங்குட்டுவனுக்குத் தன் கடவுள் தோற்றத்தைக் காட்டிக் கூறும்போது, 'தென்னவன் தீதிலன் தேவர் கோன் தன் கோயில் நல்விருந்தாயினான் - (யான்) அவன்தன் மகள்' (29 -11) என்று கூறுகிறாள். அம் மதியம் 'தென்னவர் (பாண்டியர்) குல முதல்' (4-22) ஆகும். எனவே கண்ணகியை வாழ்த்து முகமாகவே, 'திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்' என்று முதல் தொடரிலேயே- இன்னும் முதற்சொல்லிலேயே தாம் கண்ணகி வரலாற்றைக் காப்பியப் புனைவாக வடிவமைக்கப் போவதைக் கூறிவிடுகிறார்.

கண்ணகியை வானுறையும் தெய்வப் படிமமாக்கியதற்குப் பொருந்த, கோவலனை 'ஞாயிறு' என உள்ளுறைப் பொருளுடைய குறியீடாக்குகிறார். 'ஞாயிறு போற்றுதும்' என்கிறார். இவை, இளங்கோவடிகள், மக்கள் தெய்வமென வணங்கிய கண்ணகி, கோவலனைத் 'தெய்வம் தெளிமின்' என முடித்ததற்கு ஏற்பப் பாடிய தெய்வ வாழ்த்துக்களேயாம்.

கண்ணகி அன்றே மழைத் தெய்வமென, மக்களால் போற்றப்பட்டாள் என்பதை உறுதி செய்கிறது, உரைபெறு கட்டுரை (உரை-புகழ்). பாண்டியனாடு மழைவளங்குன்றியதால்,பாண்டியனும் கண்ணகிக் கோட்டம் அமைத்து விழா எடுக்கவே, 'நாடு மலிய மழைபெய்தது'.

அதைக் கேட்டுக் கொங்கிளங்கோன், தங்கள் நாட்டகத்து நங்கைக்கு விழா எடுக்கவே மழை தொழில் என்றும் மாறாதாயிற்று. அதைக் கேள்விப்பட்டு, கடல் சூழ் இலங்கைக் கயவாகுவும் நாட்பலியூட்டும் கோட்டம் அமைத்து, கண்ணகி தெய்வமான, ஆடித்திங்களில் விழா எடுத்தான். 'விழாக் கோள் பன்முறை எடுப்ப' என்று இளங்கோ குறிப்பிடுவதால், இவ்

வழிபாடு இலங்கையில் மிக்கிருந்தமை புலப்படும். அதனால் அங்கு 'மழை வீற்றிருந்து வளம்பல பெருகிப் பிழையாத விளையுள் மிக்க' நாடாயிற்று அது. இன்றும் கண்ணகியைப் பழித்தால், நாடு மழை வளமின்றி பஞ்சத்தில் வாடும் என்பது உறுதி. கண்ணகி வழிபாட்டை நாம் மீண்டும் தொடங்க வேண்டும்.

இவ்வாறு வருவனவற்றால், *கண்ணகி மழைக்கடவுள் ஆனாள்* என்றாகிறது. கற்புடைப் பெண்டிர் 'பெய்' என்றால் மழையும் பெய்யும் என்பது தமிழர் தம் நம்பிக்கை. கற்புடைப் பெண்டிரை 'வான் (மழை) தரும் கற்பினாள்' எனப் போற்றுவது சங்க கால வழக்காறு. இதனைச் சங்கப் பாடல்களில் படிக்கக் காணலாம். அதனாலேயே இளங்கோவடிகள், 'மங்கல வாழ்த்துப் பாடலில்' மூன்றாவதாக 'மாமழை போற்றுதும்' என வாழ்த்துகிறார். ஆக *முதல் மூன்றும் திங்கள், ஞாயிறு, மழை என்பன,* தெய்வநிலை எய்திய கதைமாந்தர்தம் திறத்தை உணர்த்தி, ஒருவகையில் கடவுள் வாழ்த்தாக அமைகின்றன.

மாரி-மழை எனப் பொருள்படும். மாரி அம்மன் - மழை தரும் கடவுள். கண்ணகி கோயில்கள் பல மாரியம்மன் கோயில்களென, அத்துணை வரலாற்றுணர்வற்ற மக்களால் அழைக்கப்பட்டன. கண்ணகி மதுரையை எரித்ததாகவரும் செய்தியும், அவள் தெய்வநிலையுற்றதும் ஆடிமாதம் வெள்ளிக் கிழமைகளிலேயே நடந்தேறின. அதனால் இன்றுவரை ஆடி வெள்ளி, மாரியம்மன் வழிபாட்டு நாட்களாகத் தமிழக மங்கல மகளிரால் கொண்டாடப்பட்டு வருகின்றன. இவ் ஆடிவெள்ளி பற்றி, சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்களும் தெளிவாக விளக்கியுள்ளார்.

திங்களும் ஞாயிறும் தாம் பாடவந்த கண்ணகி, கோவலனைக் குறிப்பனவே என்பதை, இளங்கோவடிகள் இரண்டாம் காதையாகிய மனையறம்படுத்த காதையில் தெளிவுபடுத்தி விடுகிறார். கண்ணகியும் கோவலனும் அருகருகே இருப்பதை,

முதிர்கடல் ஞாலம் முழுவதும் விளக்கும்
கதிர் ஒருங்கு இருந்த காட்சி போல (30, 31)

என்ற அடிகளில் இதனைக் காணலாம். உலகளாவிய கதிர்கள் இவை இரண்டுமென்பதால், முதற் காதையில் திங்களைப் போற்றுவதாகவும், ஞாயிற்றைப் போற்றுவதாகவும் தாம் கூறியன, இவர்கள் இருவரையும் பற்றியனவே என்பதை இளங்கோவடிகள் கூறாமல் கூறிவிடுகிறார்.

பதினெட்டாம் 'துன்பமாலை'யில், தன் கணவன் கொலையுண்டதாகக் கேட்டதும்,

பொங்கி எழுந்தாள் விழுந்தாள் பொழி கதிர்த்
திங்கள் முகிலோடும் சேண்நிலம் கொண்டென (30, 31)

என்பார் அடிகள். இங்கு அந்தத் திங்களுக்குத் துன்பம் உவமையாக உருக்காட்சிப் படுத்தப்படுகிறது. முன்பு பிரிவுத்துயரில் அவள் வாடும் போதே திங்கள் வாள்முகம் சிறுவியர் விரிய (4-52) என்றவர், அவ் அழகிய முகம் இங்கு தரையில் வீழ்ந்தது என்று தொடர்புணருமாறு கூறுகிறார். கானல் வரியில் கோவலன் 'காமன் செயலெழுதித் தீர்ந்த முகம் திங்களோ காணீர்' என்று (9-11) பாடும்பொழுதும், அவனது ஆழ்மனத்தில் கண்ணகி நினைவே ஓடியதோ என எண்ணத் தோன்றுகிறது.

ஊர் சூழ்வரியில், ஊர் மக்கள் கொலையுண்டு கிடந்த கோவலனைக் காட்டக் காண்கின்றாள் கண்ணகி. அவனோ, 'செம்பொன் கொடியனையாள் கண்டாளைத் தான் காணான்' கோவலன் இறந்துகிடக்க, கண்ணகி அரற்றிஅழ - அக்காட்சியைப் படம்பிடிக்கும் அடிகள், கதிரவன் மறைகின்ற காட்சியையே முன்வைக்கின்றார்.

மல்லல்மா ஞாலம் இருளூட்டி மாமலைமேல்
செவ்வென் கதிர் சுருங்கிச் செங்கதிரோன் சென்றொளிப்ப (19-35)

எனத் தொடர்கிற காட்சியிலும் கோவலனாகிய ஞாயிறு மறைகிற அவலமே தொனிக்கின்றது.

## கண்ணகி - பொற்கொடி

மங்கல வாழ்த்துப் பாடலில், கண்ணகியை அறிமுகப்படுத்தும் போது, 'ஈகை வான் கொடி அன்னாள்' என்பார்; ஈகை வான் கொடி - வானில் தோன்றும் பொற்கொடி. ஊர் சூழ் வரியில் 'செம்பொன் கொடியனையாள்' என்பார்; வாழ்த்துக் காதையில் கண்ணகி தெய்வமாகிச் செங்குட்டுவனுக்குக் காட்சி தரும்போது 'மின்னுக்கொடி ஒன்று மீவிசும்பில் தோன்றுமால்' என்று, அம் மாமன்னன் கூற்றாகக் கூறுவார். இவ்வாறு, அழகிய வண்ணப் பின்னல் போல, ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்தி ஒரு கட்டுக்குள் கொண்டுவரும் இடங்கள் மேலும் பலவுள. கட்டுக் குலையாததே கட்டிடக் கலை ஆகும். ஒவ்வோர் உறுப்பும் தொடர்புண்டு, ஒருமைப்பட்டுத் திரண்ட அழகே சிறப்பமாகும்.

மங்கல வாழ்த்துப் பாடலில் 'மண் தேய்த்த புகழினான்' என்று ஏன், ஒரு சொல்லைப் பெய்ய வேண்டும்? கோவலன் இறந்து கிடப்பதைப் பார்த்த கண்ணகி, 'பொன் உறு நறுமேனி பொடி ஆடிக் கிடப்பதோ' என்று, ஊர் சூழ் வரியில் அழும்போது, அந்த மண் தேய்த்த புகழ் மேனி, இப்போது புழுதிப் பொடி படிந்து போனதை நினைத்து, அவலம் மிகுவதற்கோ என எண்ண வேண்டியுள்ளது.

மங்கல வாழ்த்துப் பாடலில் கோவலனை அறிமுகப்படுத்தும் போது, 'கண்டேத்தும் செவ்வேள்' (முருகன்) என இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார். பின்னர்க் குன்றக் குரவையில், கண்ணகியைப் பார்த்த குன்றக் குரவர்கள், 'மலை வேங்கை நறு நிழலின் வள்ளி போல்வீர்' எனக் கண்டவுடனேயே, கடவுளாக நினைத்து வினவுகின்றனர். இவற்றைத் திட்டமிட்டு, கோவலன், கண்ணகி இருவரும் தெய்வ நிலைக்குரியர் என்பதை நினைவூட்டவே கூறினார் என்றால் மிகையாகுமா?

கொலைக்களக் காதையில் கோவலனுக்கு கண்ணகி உணவு பரிமாறிய காட்சியைக் கண்ட மாதரியாகிய இடைக்குல மடந்தையும் அவள்மகள் ஐயையும், அவ் இணையரை, கண்ணனும் நப்பின்னையுமாகவே கண்டு, ஐயுறுகின்றனர்.

ஆயர் பாடியின் அசோதை பெற்றெடுத்த
பூவைப் புதுமலர் வண்ணன் கொல்லோ
நல்லமுது உண்ணும் நம்பி; ஈங்குப்
பல்வளைத் தோளியும் பண்டுநம் குலத்துத்
தொழுனை ஆற்றினுள் தூமணி வண்ணனை
விழுமம் தீர்த்த விளக்குக் கொல் என - (46 -51)

இவ்வாறு தெய்வமென, மங்கல மடந்தை என நூல் முழுதும் விரவியும் இயைபுபடுத்தியும் படிப்படியான வளர்ச்சி காட்டியும் சொல், தொடர், உவமை உத்திகளில் தொடர்புறுத்தியும் சிலம்பில் வருமிடங்கள் மிக நுட்பமானவை.

புறக் கட்டமைப்பில் காதை அமைப்பு குறிப்பிடத்தக்கது. காதை என்பதற்கு முந்தைய பாடம் பாட்டு என்பதே. இவ்வாறு ஏடுகள் சிலவற்றில் காணப் பெற்றதென உ.வே.சா.வும் குறித்துள்ளார். மனையறம் படுத்த பாட்டு, இந்திர விழவூரெடுத்த பாட்டு என வரும். *'நாட்டுதும் யாம் ஓர் 'பாட்டு'டைச் செய்யுள்'* என்று இளங்கோ கூறியதாகவே பதிகமும் குறிப்பிடுகிறது. இப்பாட்டுடன் கூடிய கதையமைப்பு, நாடக உத்திகள் எனப்பலவுள.

அகநிலைக் கட்டமைப்பு, புறநிலைக் கட்டமைப்பு, என நம் ஆய்வுத்தெளிவு கருதிப் பிரித்துப் பேசினாலும் இவை ஒன்றினொன்று பிரிக்க முடியாத இயைபுடையனவே.

இவை அனைத்தையும் தொகுத்தாய்வது சிறந்த சிலப்பதிகாரக் கல்வியாகும்.

உலகிலேயே நாடகக் காப்பியக் கட்டமைப்பில் சிலப்பதிகாரம் ஈடு இணையற்றது என்பதை நிலைநாட்ட, இதனுடன் நாம் காப்பியக் கட்டமைப்புப் பற்றிய (Epic Structure) மேனாட்டு நூற்களையும் படித்து ஒப்பாய்வு செய்ய வேண்டும்.

# வேளாள புராணம்: ஓர் அறிமுகம்

*முனைவர் ம.ரா.போ.குருசாமி*

## முன்னுரை

“சாதிகள் தேவைதானா” என்ற கேள்வி எழுகின்ற இந்தக் காலத்தில், ஒரு சாதியின் பெயர் கொண்ட ‘வேளாள புராணம்’ என்ற நூலை வெளியிட வேண்டுமா? - இப்படி ஒரு கேள்வியைச் சில பேர் கேட்பார்கள்; பல பேர் வெளிப்படையாகக் கேட்காவிட்டாலும் மனத்துக்குள்ளே கேட்டுக்கொள்வார்கள். முற்போக்கான எண்ணத்துக்கு வழி தேடுகிறவர்கள் இந்தக் கேள்விக்கு விடை சொல்லக் கடமைப்பட்டவர்கள்.

‘வேளாள புராணம்’ என்ற இந்த அரிய நூலைப் பதிப்பித்து உலகிற்கு உதவியுள்ள அருட்செல்வர் திரு.நா.மகாலிங்கம் அவர்கள் இந்தக் கேள்விக்கு விரிவாக (பக்கம் 11 - V) விடை சொல்லியிருக்கிறார்கள். அதில் ஒரு பகுதி மட்டும் இங்கே எடுத்துக் காட்டுகிறேன்:

> “தன்னை உயர்த்திப் பேசுதல் மற்றவற்றைக் குறைத்து மதிப்பிடுதலாகாது. தன் வலிமையை உணராதவன் தன் பொறுப்பைச் சரிவரச் செய்யமாட்டான். தன்னால் முடியும் என்று நம்பிக்கை கொள்ளாதவனால் தன்னை நம்பியிருக்கும் கூட்டத்தை வழி நடத்திச் செல்ல முடியாது. க்ஷத்திரிய புராணம், வைசிய புராணம், வேளாளர் புராணம், செங்குந்தர் புராணம், வன்னிய புராணம் முதலியவை சாதி வழிப்பட்டவை என்று நினைத்து அவைகளைப் புறக்கணிக்கலாகாது. அவை இந்தப் பாரத சமுதாயத்தின் ஒவ்வொரு பகுதியைச் சிறப்பிக்கின்றன. ஒவ்வொரு பகுதியின் வரலாற்றையும் நமக்கு விளக்குகின்றன”

ஆம், ஒவ்வொரு பகுதியும் இணைந்த இணைப்புத்தான் பாரத சமுதாயம். ஒரு பகுதி மற்றொரு பகுதியைப் பழிக்காம விருப்பதில் கவனமாக இருக்க வேண்டும். அவரவர் பெருமைகளை உணர்ந்து பாரம்பரிய வரலாற்றை உணர்ந்து, பண்பாடு பேணிச் செயல்பட்டால் பாரத சமுதாயம்

ஒருமைப்பாட்டுணர்விலே ஓங்கும்; வேளாளர் புராணம், எந்த ஒரு சாதியையும் பழிக்கவில்லை, வேளாளர் பெருமையை அவர்கள் செய்யும் வேளாண்மை நெறிகளை முறை திறம்பாமல் எடுத்துரைக்கிறது. வேளாண்மை பற்றிய விவரங்கள் இந்நூலின் தனிச் சிறப்பு. வேளாளர்க்குரிய நெறியைப் பேணுவதற்கு இந்த நூல் வழி காட்டுகிறது.

யாரொடும் பகை கொள்ளலன் என்றபின்
போர் ஒடுங்கும் புகழ் ஒடுங்காது

என்று கம்பர் பாடுவார். இந்த நெறி மறவாமல் பகைமைக்கு இடம் தராமல், போர் ஒடுங்கவும், புகழ் ஓங்கவுமான பண்பாட்டை இந்த 'வேளாள புராணம்' பேணுகின்றது.

எனவே, சாதி வெறிக்கோ பகைமைக்கோ இதில் இடமில்லை. சமுதாய ஒருமைப்பாட்டுக்கு இந்த நூல் தடையாக இல்லை.

ஆரம்பத்திலேயே எழக்கூடிய ஒரு முக்கியமான தடைக்கு விடை சொன்னபின், இனி இந்த நூல் பற்றிச் சில செய்திகளைச் சொல்ல முற்படுகிறேன்.

ஓர் இலக்கிய மாணவன் என்ற முறையிலேயே இந்த நூலை அறிமுகம் செய்ய விரும்புகிறேன். அதுவும் முழு நூல்பற்றியல்லாமல், ஒரு பகுதியில் மட்டும் நாட்டம் செலுத்துவேன்.

தனிப்பாடல் பாடுகின்ற கவிஞனுக்கு அப்போதைக்கு தூண்டிவிடும் உணர்ச்சியும் அதற்கேற்ற சொல்வன்மையும் இருந்தால் போதும். வைகையாறு கடலிலே கலப்பதில்லை; இந்த நிலவியல் உண்மையைக் கற்பனை நயத்தோடு பாட நினைத்த ஒரு கவிஞர்,

நாரியிடப் பாகருக்கு நஞ்சளித்த பாவி என்று
வாரியிடம் போகாத வையை

என்று அற்புதமாகப் பாடினார். அந்தக் கவிஞரே முழுநீளக் காப்பியம் பாட நேர்ந்திருந்தால் வெற்றி பெற்றிருப்பார் என்று சொல்லமுடியாது. ஏனென்றால், பாரகாவியம் பாட முனையும் கவிஞனுக்குக் கற்பனைத் திறம் மட்டும் இருந்தால் போதாது.

பரந்து விரிந்துள்ளது காப்பியக் களம்: அந்த அகன்ற களத் திரையைக் கவிதை ஓவியங்களால் முறையாக நிரப்ப வேண்டுமென்றால் மொழிப்புலமை, சொல்லாட்சியில் சாமர்த்தியம், பலதுறைத் தேர்ச்சி, உயிரினங்களின் உள்ளப் பாங்கினை அறிதல்... என்று மிகப் பல திறப்பாடுகள் பார காவியம் பாடுகின்ற கவிஞனுக்கு வேண்டும். வேளாள புராணத்தை இயற்றிய மகாவித்துவான் கந்தசாமிக் கவிராயரிடம் இங்கே குறித்த பல்வேறு திறப்பாடுகளும் ஏராளமாக அமைந்திருந்தன.

ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பார்கள். ஆங்காங்கே கண்ணில்பட்ட ஒரு சிலவற்றை மட்டும் இங்கே தருகிறேன்.

## சொல்வளம்

சொல்லாட்சி மிகவும் இன்றியமையாதது; படைப்பாளியின் புலமையை உணர்வதற்குச் சிறந்த கருவி. வேளாள புராணத்தில் ஒரு பாடல்:

ஏற்றானை பறவை நகர் ஏற்றானை
இறைவி இடப் பாகம் என்னும்
கூற்றானை - வெகுண்டுவரும் கூற்றானை
உதைத்த பெருங்கோனை - யார்க்கும்
தோற்றானை - உரித்த பெரும் தோற்றானை
உடையவனைத் -துகில் ஓய் வேணி
ஆற்றானை - அடியர் இடர் ஆற்றானை
அளகேச அரனைத் தாழ்வோம்

ஆந்தைகுல கொங்கு வேளாளரில் ஒரு கூட்டத்தார். வேளாளர்க்கு உரிய கண்மலி நகரில் எழுந்தருளியிருக்கும் அளகேசனைத் துதிக்கும் பாடல் இது. ஏற்றானை, கூற்றானை, தோற்றானை, ஆற்றானை என்ற சொற்கள் இரண்டிரண்டு தடவை இப்பாட்டில் வருகின்றன. இரண்டு தடவைகளிலும் சொல்லின் வடிவம்தான் ஒன்றே தவிரப் பொருள் ஒன்றில்லை.

ஏறு என்ற இடப வாகனம் உடையவன்:
ஏற்றான்:

ஆந்தைப் பெயர் கொண்டோர்க்குரிய நகர்
ஏற்றான்:
இறைவனை இடப்பாகம் கொண்ட
கூற்றான்:
வெகுண்டு வரும் யமனை - கூற்றானை
உதைத்தவன்:
யாரும் எளிதில் காண முடியாதவன்
ஆதலால் யார்க்கும் தோற்றான்
யானையின் தோல் உரித்து
ஆடையாகக் கொண்டவன்,
ஆதலால் தோல்தானை உடையவர்
சடையில்- வேணியில் - கங்கை
அணிந்தவன், ஆதலால்
வேணி ஆற்றான்.
அடியவர்கள் படும் துன்பத்தைக் கண்டு
பொறுக்கமாட்டான். ஆதலால்
*அடியர் இடர் ஆற்றான்*

இப்படி விளக்கிய பிறகு, நமக்கெல்லாம் தெரிந்த சொற்கள் தாமே என்று தோன்றலாம். ஆனால் எல்லோர்க்கும் தெரிந்த சொற்களைப் புலமை வித்தகமும் கற்பனைச் சிறப்பும் பொலிந்திடப் பாடலாகப் பாடவேண்டுமே! அந்த ஆற்றல் கவிவல்ல புலமைக்கே வாய்த்த வரமாகும்.

இந்தப் பாடலில் இன்னொரு நயமும் நம் கவனத்துக்கு உரியது. நம்மாழ்வாரின் திருவாய்மொழியின் முதற்பாடலில் 'துயர் அறு சுடர் அடி தொழுது எழு என் மனனே' என்பது இறுதி அடி. திருமாலின் திருவடியைத் 'துயர் அறு சுடர் அடி' என்று குறிப்பிடுகிறார், ஆழ்வார். அடியவர்களின் துயரை அறுப்பதால் சுடர்கின்ற அடி எனவும் அடியவர்களின் துயர் அறும் வரையில் பெருமாளுக்கும் துயர் அறாது எனவும் இந்த அடிக்கு வைணவப் பெருமக்கள் நயம் கூறி விளக்குவார்கள். அடியவர்களுக்கு இடர் ஏற்படுமாயின் கண்மலி நகரில் எழுந்தருளியிருக்கும் அளகேசப் பெருமான் தாங்கமாட்டான் என்று வேளாள புராணமுடையார் சொல்வது திருவாய் மொழிப்

பாடலைவிடத் தெளிவாக உள்ளது. துயர் தாக்குவது அடியவர்களை அதைத் தாங்க மாட்டாதவன் இறைவன் அற்புதமான, ஆழமான நயம் செறிந்தது இந்தக் கருத்து.

காவியப் புலவர்களின் மற்றொரு திறம் சொல்லாட்சியும் சொல் ஆக்கமும் ஆகும்.

காஞ்சி நகரத்தின் அகழியை வருணிக்கும் கவிராயர், அதன் அகழி கடல் போல அகன்று, ஆழ்ந்து இருக்கிறது என்று குறிப்பிடுகிறார். 'கடல் போன்றது அகழி' என்று மட்டும் சொல்லியிருந்தால், அது வெறும் சாதாரணமான உவமை என்ற அளவில் நின்றுவிடும். கடலைக் குறிப்பதற்கு உள்ள பல சொற்களையும் யாப்பியல் சிதையாமல் எடுத்துரைக்கிறார்:

பரவை, ஆதி, அம்பரம்
மகராலயம், பகரும்
குரவை, ஓதம், கார்கோள்
முதற் கூறிடும் பெயர்கள்
திருநகர்ப்புற அகழிக்குச்
சிறந்தன வேனும்
உரிய காரண இடுகுறியாகக்
கடற்கு உறுமால்

சொற்களஞ்சியம் புலவர்க்கு எப்படிக் கைகொடுத்து உதவுகிறது என்பதற்கு இது சிறந்த எடுத்துக்காட்டு. பரவை, ஆதி, அம்பரம், மகராலயம், குரவை, ஓதம், கார்கோள் என்ற கடற் பெயர்கள் காரணப் பெயர்களாய்க் காஞ்சி நகரத்து அகழிக்கே உரியனவாம். ஆனால், இவற்றையெல்லாம் கடலுக்கு உரியன என்று புலவர்கள் சொல்லுகிறார்களே என்றால், கடலுக்கு அவை காரண இடுகுறிப்பெயர்கள் என்று சமாதானம் கூறுகிறார், கவிஞர். நான்கு கால் உடையவற்றையெல்லாம் நாற்காலி என்று சொல்லாம், CHAIR என்பதை மட்டும் நாற்காலி என்று சொல்வது காரண இடுகுறிப்பெயர். அகழியை வருணிக்கும் இந்தப் பாடல் கடலைக் குறிக்கும் பல சொற்களைக் கொடுத்துக் கவிஞர்க்குச் சொற்களஞ்சியம் எப்படி உதவுகிறது எனப் புலப்படுத்துகிறது. மேலும், காஞ்சி நகரத்து அகழி கடல்

போன்றது என்ற வருணனையையும் கொடுத்தது; மற்றும் இந்தப் பெயர்களெல்லாம் அகழிக்குக் காரணப் பெயர் என்று சொன்னதால் கடலைவிட அகழியே சிறந்தது என்ற நயத்தையும் குறிப்பாகப் புலப்படுத்திற்று. இவை எல்லாவற்றுக்கும் மேலாகக் கவிராயரின் இலக்கணப் புலமை இலக்கியக் கற்பனைக்கு எப்படி உதவுகிறது என்பதையும் காண முடிகிறது. இது போலவே சிறந்தது தழீஇய எச்ச உம்மை, எதிரது தழீஇய எச்ச உம்மை என்ற இலக்கணக் குறிப்பை இலக்கிய நயம்படப் பின்னரும் பயன்படுத்தியிருக்கிறார். (புராண வரலாறு-1)

இலக்கணமும் இலக்கியமும் கைகோத்துக் கலைநயப் பணியாற்றுவது அரிதினும் அரிதாகிய புலமைப் படைப்பாளரிடம் மட்டுமே காணமுடியும்.

நாலடியார் (பக் - 13), தோலடியார் (பக் - 13), பங்கண்ணல் *(பக் - 19), மறை தந்த மீன் (பக் - 62), வேணிகம் உடையன்* (பக் - 73) போன்ற சொல்லாட்சிகள் கவிராயரின் சொற்படைப்புத் திறத்துக்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாகும். நாலடியார் இங்கே நந்தியம் பெருமனைக் குறித்தது; தோலடியார், தோல் பாவியுள்ள கால் கொண்ட அன்னத்தைக் குறித்தது. உமையம்மையைத் தம் இடப் பங்கில் கொண்ட சிவபிரானைப் பங்கண்ணல் என்கிறார், கவிராயர். கடலிலிருந்து நான்கு வேதங்களை மச்சாவதாரத்தில் மீட்டுக் கொணர்ந்த திருமாலை, மறை தந்த மீன் என்கிறார். சடாபாரம் கொண்ட தலையுடைய சிவபிரானை வேணிகம் உடையான் என்பது புதிய தொடராக்கம்..... இவையெல்லாம் மொழித்திறம் கைவந்த மகாவித்து வான்களுக்கே உரியது. மகாவித்துவான் கந்தாசாமிக் கவிராயர் பெருமைக்குரிய *அந்தப் பட்டியலிலே இடம் பெறுகிறார்* என்பதில் ஐயம் இல்லை.

ஒரே எழுத்துகளின் வரிசை பல அடிகளிலும் வருமாறு பாடும் உத்தியை ஏகபாதம் என்பார்கள். ஒரே எழுத்துவரிசையை அடுக்கிவிட்டால் போதாது; அந்த எழுத்து வரிசைக்கு வெவ்வேறு பொருள் கொள்ளவும் இடம் இருக்க வேண்டும். யமக அணியின் கடினமான கோலம் இது. வேளாள புராண

ஆசிரியர்க்கு இந்த வல்லமையும் கைவந்த கலையாக இருக்கிறது.

அடை இருப்பையும் புள்ளுவ ரம்பையும்
அடை இருக்கையும் புள்ளுவ ரம்பையும் (பக் - 35)

என ஓரிடத்து, வந்துள்ளதை எடுத்துக் காட்டலாம்.

ஏறத்தாழ இதுபோல வரும் அடிகள் மேலும் சிலவும் காணப்படுகின்றன. மொழிப் புலமையில் ஒப்பற்ற வீறு கொண்டவர்க்கே இந்தத் திறம் வாய்க்கும். இந்த அடிகளுக்குப் பொருள் சொல்லி, நயம் காட்டி உங்கள் பொறுமையை இப்போது சோதிக்க நான் விரும்பவில்லை, 'மிறைக் கவி' என்று புலவர்கள் குறிப்பிடுகின்ற யாப்பியல் வகையிலும் வேளாள புராணம் இயற்றியவர் வல்லவர் என்பதற்காகவே எடுத்துக் காட்டினேன்.

சிலேடைகள், திரிபுகள் மகாவித்துவான் கந்தாசாமிக் கவிராயருக்கு மிக மிக எளிய வித்தைகள். புலமை வளத்தை நாடுவோரை மருட்டாமலும், சொற்சிலம்பம் கண்டு வியப்போரை மருட்டியும் மிகப் பல இடங்களில் தம் திறமையைக் கவிஞர் வெளிப்படுத்தியிருக்கிறார். இரண்டாம் எழுத்து முதலில் பல எழுத்துக்கள் ஒன்றுபோல் வருவதை எதுகை என்பர்: அதுபோலவே அடியின் இறுதியிலே பல எழுத்துக்கள் ஒன்றுபோல் வருவதை இயைபுத் தொடை என்று புலவர்கள் பாராட்டுவர். வேளாள புராணத்தில் இயைபுத் தொடைக்கும் குறைவில்லை. ஓர் எடுத்துக் காட்டு மட்டும் இங்கே காணலாம்.

கொண்டு இடித்த கொடிச்சியர் மாசுணம்
வண்டல் இட்டது வாரி அம் மாசுணம்
வெண்டெனக். கம் மிதந்தன மாசுணம்
அண்டர் சொற்கும் அரிது எனில் மாசுணம்

இப்பாடலின் எல்லா அடிகளிலும் இறுதியில் 'மாசுணம்' என்ற சீர் வருகிறது. எழுத்து வடிவிலே ஒன்றாகவே இருந்தாலும் பொருள் கொள்ளும்போது இந்தச் சீரைப் பல வகையாகப் பிரித்துக் கொள்ள வேண்டும். மாசுண்ணம் (வாசனைப் பொடி), மாசுணம் (பாம்பு), மாசு உண் அம் (மேகம் உடகொண்ட நீர்), மாசு உண்ணோம் (குற்றத்தை உட்கொள்ள மாட்டோம்) என்று

இடம் நோக்கிப் பிரித்துப் பொருள் கொள்ளும்படியாக இப்பாடலில் இயைபுத் தொடை அமைந்துள்ளது. எந்தச் சொல்லுக்கும் உடனே அகராதியை எடுத்துப் பொருள் தெரிந்து கொள்கிற அளவுக்கு மொழியறிவை எளிமையாக்கிவிட்டோம். அப்படிப்பட்ட நமக்கு மாசுணம் என்ற ஒரு வடிவமே பலவாறு பொருள்கொள்ள இடம் தரும் என்பதை மனத்தில் வாங்கிக் கொள்வதே கடினம்தான்.

கவிதையை அனுபவிக்கப் புகும் நமக்கு இப்படிப்பட்ட கடினப் பயிற்சியெல்லாம் தேவைதானா என்ற கேள்வி ஒரு பக்கம் எழத்தான் செய்கிறது. கவிதைகளுக்கு வசப்பட்டுச் சுவைப்பவர்கள் காஞ்சி நகரத்துப் பல வீதிகளில் வாழ்கிறார்கள் என்று நகரின் சிறப்புப் படலத்தில் (பக் 74) ஒரு செய்தி வருகிறது.

'பா வசியத்தினர் பரப்புக்கு எண்ணிலர்' என்பது கவிஞர் வாக்கு. இப்படிப் பா வசியப்பட்டுச் சுவைப்பவர்களுக்கு யமகம், திரிபு, இயைபு, ஏகபாதம் போன்ற உத்திகள் 'சர்க்கஸ்' போலவும் சொற்சிலம்பம் போலவும் இருக்குமே என்று நினைக்க இடம் உண்டு. ரசிகமணி டி.கே.சி. போன்றவர்கள் இப்படிப்பட்ட பாடல்களைக் கவிதைகள் என்றே ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்பது உண்மைதான். ஆனாலும், மொழிப் புலமையை வளமாகப் பெற்ற பெருமக்களால்தான் இப்படிப்பட்ட செய்யுள்களை இயற்றமுடியும் என்பதையும் எவராலும் மறுக்கமுடியாது.

உரையாசிரியர் புலவர் இல.பழனிச்சாமி அவர்கள் இதுபோன்ற இடங்களில் மிகத் தெளிவாக உரை விளக்கம் தந்து உதவியிருக்கிறார் என்பதையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

யமகம், திரிபு போன்ற யாப்பியல் உத்திகளில் அஷ்டப் பிரபந்தம் பாடிய பிள்ளைப் பெருமாள் ஐயங்காரைப் புலமையுலகம் மிகவும் போற்றும். கலம்பகம் போன்ற சிற்றிலக்கியங்களில் இத்தகைய திறமையைக் காட்டிய பிள்ளை பெருமாளையங்காருக்குப் பார காவியத்தில் அந்தத் திறமையைக் காட்டிய மகாவித்துவான் கந்தாசாமிக் கவிராயர் சற்றும் இளைத்தவர் அல்லர் என்பதை வேளாள புராணம் தெளிவாக்குகிறது.

## பொருள்வளம்

சொல்லணிகளை விடப்பொருளணிகளுக்கே கவிதை உலகம் சிறப்புக்கொடுக்கும். அந்தக் கணிப்பிலும் வேளாள புராணம் சிறப்பாகவே விளங்குகிறது. உவமை, உருவகம் போன்ற அணிகள் மிகுதியாக இப் புராணத்துள் இடம் பெற்றுள்ளன.

கருத்து நலத்தால் கவிதைக்குப் பெருமை சேர்க்கும் இரண்டொரு சான்றுகளை மட்டும் எடுத்துக் காட்ட முயல்கிறேன்.

காமாட்சியம்மையோடு சிவபெருமான் காஞ்சியில் வாழ்கின்றான். எனவே, உண்டு எனத் தக்க எந்தப் பொருளும் இங்கே இல்லை என்று சொல்ல முடியுமா? எல்லாப் பொருளும் இங்கே உண்டு; ஏனென்றால், அறங்கள் வளர்க்கும் காமாட்சியம்மை உடனமர் சிவபிரான் இங்கே எழுந்தருளியிருக்கிறார். இந்தக் கருத்தை நயம்பெறக் கவிஞர் விளக்கும் பாடலைக் கேளுங்கள். சிவபிரான் புகழை அம்மையோடு இணைத்து பாடுவதில் ஒரு நயம் உண்டு. அடியவர்க்கு அருள்செய்ய எழுந்தருளும் போது சிவபிரான் உமையம்மையோடு எழுந்தருள்வதாகவே எடுத்துரைப்பது சைவ சமய மரபு என்பதை இங்கே நினைவில் கொள்ள வேண்டும். தமிழகத்துச் சமய மரபு என்றே இக்கருத்தைப் பொதுமைப்படுத்திக் கூறலாம். ஏனெனில், பெருமாள் திருவருள் அடியவர்க்குச் சேரவேண்டுமாயின் பிராட்டியின் பரிந்துரை தேவை என்பது வைணவ மரபு அவர்கள் இதனால் பிராட்டியைப் புருஷகார பூதை சிபாரிசு செய்வதற்கு உரியவள் என்று குறிப்பிடுவர். வேளாள புராணப் பாடலைப் பார்க்கலாம்.

யாவர்க்கும் அன்னை, எங்கள்
ஐயை காமாட்சியோடும்
தேவர்க்கும் தேவன் - எல்லாத்
திருமறைகட்கும் நாதன் -
மூவர்க்கும் முதல்வன் - எங்கள்
முக்கண்எம் பெருமான் - மற்றை
எவர்க்கும் தலைவன் வாழ்ந்தால்
என்ன உண்டு என்ன இல்லை? (பக் - 78)

திருமாலே பிறந்து, இருந்து, அரசாண்ட இடம் அயோத்தி நகரம்; எனவே, தேவர் உலகத்திலும் இதற்கு ஈடாக இன்னொரு நகரம் உண்டோ என்ற கருத்துப்படக் கம்பர் பாடிய

செங்கண்மால் பிறந்து, ஆண்டு, அளப்பருங்காலம்
திருவின் வீற்றிருந்தனன் என்றால்,
அங்கண்மா ஞாலத்து இந்நகர் ஒக்கும்
பொன் நகர் அமரர் நாட்டு யாதோ?

என்ற வரிகள் இங்கே நினைவில் எழுகின்றன. நகரச் சிறப்பைப் பாடவந்த புலவர், நாதன் சிறப்பைச் சமய மரபோடு இணைத்துப் பாடிய சிறப்பை வேளாள புராணமுடையார் பாட்டால் தெளியமுடிகிறது.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகிய மூவர் முதலிகளைப் போற்றி வணங்குவது சைவ மரபு. அந்த மரபினைப் பேணும் முறையில் வேளாள புராண ஆசிரியர், அவர்களுக்கு வணக்கம் செலுத்துகிறார். இங்கே குறிப்பிடத் தகுந்த சிறப்பு என்னவென்றால், பாடப் புகுந்த வேளாள புராணத்துக்கு ஏற்றபடி மூவரையும் வேளாள இனத்தோடு தொடர்புபடுத்திப் பாடுகிறார் என்பதுதான். திருநாவுக்கரசர் குறுக்கையர் குடி என்ற வேளாள மரபினைச் சேர்ந்தவர்; ஆகையால், அவரை வேளாள புராணத்தோடு தொடர்புபடுத்திப் பாடுவதில் இடர்ப்பாடு எதுவும் இல்லை.

வேளாளர்கள் உயிர்க் குலத்துக்கெல்லாம் உடல்பேணும் உணவை விளைப்பவர்கள். அத்தகு பெருமைக்குரிய வேளாளர்கள் திருநாவுக்கரசரைத் தங்கள் இனத்தவர் என்று கொண்டாடும் சிறப்பு உடையவர்கள். வேளாளரால் தம் இனத்தவர் என்று கொண்டாடப்படும் சிறப்புக்கு மேலாகவும் ஒரு சிறப்பு உண்டு. உடலுக்கு உணவு உதவிடும் வேளாளர் குலத்தில் தோன்றிய திருநாவுக்கரசர் உயிர்க்குப் புகலிடமாய் உதவுகின்ற உணவு உதவும் வேளாளர் குலத்தில் தோன்றிய திருநாவுக்கரசர் உயிருக்குப் புகலிடமாகத் தேவாரம் பாடி உதவினார். அவருடைய திருவடியை நம் முடிமேல் சூடுவோமாக. இது பாடலின் செய்தி. இனிப் பாடலைக் காண்போம்.

அறம் தழைத்திட உடற்கெலாம்
களைகணாய் அமைந்தார்
சிறந்த வான் தமர் எனச் சொலும்
சீரினும் சிறந்தோன்
உறைந்த தென்மறை உயிர்க்கெலாம்
களைகணாய் உதவப்
பிறந்த மூவரில் முன்னையோன்
அடிமுடி பெறுக (பக் - 14)

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் என்ற வரிசையுள் மூவரைச் சொல்வது மரபு. எனினும், மூவரில் மூத்தவர் திருநாவுக்கரசரே என்ற செய்தியையும் சொல்லிப் பெருமைப்படுகிறார், ஆசிரியர்.

ஆனால் சைவ மரபை ஆசிரியர் மாற்றவில்லை என்பதையும் இங்கே நினைப்பூட்ட வேண்டும். பாடிய பாடல் வரிசையில் முதலில் சம்பந்தர் வணக்கப் பாடலையே முதலில் அமைத் திருக்கிறார். சம்பந்தர் வேளாளர் அல்லர், வேதியர் என்பதற் காகச்சைவ மரபைப் புறக்கணித்துத் திருநாவுக் கரசர்க்குரிய வணக்கப் பாடலை முதலில் அமைக்கவில்லை. தம் குலப் பெருமையை மிகுதிப் படுத்துவதற்காக மற்றொரு சார்பினரைப் பிற்படுத்தும் அநாகரிகம் கந்தசாமிக் கவிராயரிடம் இல்லை.

திருஞானசம்பந்தருக்கு ஆட்பட்ட அடியாரின் அடியில் எழும் தூசி படுமாயின் துன்பங்களெல்லாம் அழிந்துவிடும் என்று சொல்லித் திருஞானசம்பந்தப் பிள்ளையாருக்கு வணக்கம் செலுத்துகிறார்.

ஒடு விழுந்து சீப் பாயும்
ஒன்பதுவாய்ப் புண்ணுக்கு
இடுமருந்து யான் அறிந்து
கொண்டேன் - கடு அருந்தும்
தேவாதி தேவன்
திருவொற்றி யூர்த்தெருவில்
போவார் அடியிற் பொடி

என்ற பட்டினத்தாரின் பாடற் கருத்து, நம் கவிராயருக்கு

உதவியிருக்கிறது. இந்தக் கருத்தைச் சொல்லும் பாடலில் வேளாளர் பெருமையை அருமையாக இணைத்திருப்பது கந்தசாமிக் கவிராயரின் தனிச் சிறப்பாகும் . வேளாளர்களை 'வாளார்கண் செந்துவர்வாய்' என்னும் திருப்பாடலால் புகழ்ந்தவர் வேதியர் தலைவராகிய சீர்காழி முனிவர்; அந்தச் சம்பந்தப் பிள்ளையாருக்கு ஆட்பட்ட அடியவர்களின் கால் தூசி துன்பங்களையெல்லாம் போக்கும் வல்லமை உடையது. இது பாடலின் திரண்ட கருத்து; இனி, பாடலைக் காணலாம்.

வாளார்கண் செந்துவர் வாய்
வண்பாட்டு மறைவாக்கால்
வேளாளர் தமைப் புகழ்ந்த
வேதியர் கோன் காழி முனிக்கு
ஆளாக நின்ற திரு அடியாரின்
அடி எழுந்த
தூள் ஆகம் பட்டிடுமேல்
துன்பமெலாம் பட்டிடுமால் (பக் - 14)

திருஞானசம்பந்தர் திருவாய் மலர்ந்தருளிய திருப்பாடல்கள் முதல் மூன்று திருமுறைகளில் இடம் பெற்றுள்ளன. அவை மொத்தம் 4158 திருப்பாடல்கள். வேளாள புராணம் பாடத் தொடங்கி இருபத்தாறாம் பாடலில் திருஞானசம்பந்தருக்கு வணக்கம் செலுத்தும் கவிராயருக்குத் திருமுறைத் திருப்பாடல் களெல்லாம் நெஞ்சக் களத்தில் ஆழமாகப் பதிந்துள்ளன; வேண்டிய திருப்பாடல் வேண்டிய கணத்தில் நினைவரங்கிலே எழுகிறது. கவிராயரின் மனக் களம் ஒரு கணிப்பொறி போல் விளங்கியிருக்கிறது. ஆகையால்தான், 4158 பாடல்களில் 'வாளார்கண் செந்துவர்வாய்' எனத்தொடங்கும் பாடலில் வேளாளர் புகழப்பட்ட செய்தி சட்டெனக் கவிராயருக்குக் குரல் கொடுத்துக் கைகொடுத்திருக்கிறது. கணிப்பொறி யுகத்தில் வாழும் நமக்குக் கந்தசாமிக் கவிராயரின் நினைவாற்றல் மிக வியப்பளிக்கிறது.

*(தொடரும்)*

பதிப்பாசிரியர், இரா.சதாசிவம், 2/404, மருதுபாண்டியர் தெரு, மதுரை-20. ✆2532879

அன்பு அச்சகம், மதுரை-1. ✆2341116